## செப்டம்பர் – 26 – புதன்

### புனித கேபஸ்மாஸ் தமியான்

**பொய் வழியை என்னைவிட்டு விலக்கியருளும்: உமது திருச்சட்டத்தை எனக்குக் கற்றுத்தாரும். திபா. 119:29**

### முதல் வாசகம் : நீதி மொழிகள் 30 : 5 - 9

கடவுளின் ஒவ்வொரு வாக்கும் பரிசோதிக்கப்பட்டு நம்பத்தக்கதாய் விளங்குகிறது. தம்மை அடைக்கலமாகக் கொண்டவர்களுக்கு அவர் கேடயமாயிருக்கிறார். அவருடைய வார்த்தைகளோடு ஒன்றையும் கூட்டாதே. கூட்டினால் நீ பொய்யனாவாய் அவர் உன்னைக் கடிந்துகொள்வார். வரம் இரண்டு உம்மிடம் கேட்கிறேன், மறுக்காதீர் நான் சாவதற்குள் அவற்றை எனக்கு அளித்தருளும். வஞ்சனையும் பொய்யும் என்னைவிட்டு அகலச்செய்யும் எனக்குச் செல்வம் வேண்டாம், வறுமையும் வேண்டாம் எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும். எனக்கு எல்லாம் இருந்தால், நான், ”உம்மை எனக்குத் தெரியது” என்று மறுதலித்து, ”ஆண்டவரைக் கண்டது யார்?” என்றுகேட்க நேரிடும். நான் வறுமையுற்றால், திருடனாகி, என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்க நேரிடும்.

**பதில்பாடல் :** என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு

### நற்செய்தி : லூக்கா 9 : 1 - 6

அக்காலத்தில் இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து, பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார். இறையாட்சிபற்றிப் பறைசாற்றவும் உடல்நலம் குன்றியோரின் பிணிதீர்க்கவும் அவர்களை அனுப்பினார். அப்போது அவர்களை நோக்கி, ”பயணத்திற்குக் கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டு போகவேண்டாம். ஓர் அங்கிபோதும். நீங்கள் எந்தவீட்டிக்குள் சென்றாலும் அங்கேயே தங்கியிருங்கள் அங்கிருந்தே புறப்படுங்கள். உங்களை ஏற்றுக்கொள்ளாதவர் களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்றார். அவர்கள் ஊர் ஊராகச் சென்று எங்கும் நற்செய்தியை அறிவித்து நோயாளிகளைக் குணமாக் கினார்கள்.

**தியானம்:** “அழைக்கப்பட்டவர்களோ பலர் ஆனால் தெரிவு செய்யப்பட்டவர்களோ சிலர்” என்ற வேத வாக்கியத்திணங்க இறைமகன் இயேசு தனது சீடர்களுக்கு நோய்களைக் குணப்படுத்தவும், பேய்களை ஓட்டவும் அதிகாரங்களை கொடுத்து அனுப்பி விடுகிறார். அதே போன்று தாயின் கருவறையில் உருவாகும் முன்பதாகவே எம்மை அறிந்திருந்தவர் எம்மையும் அழைத்து எமக்கு பல அதிகாரங்களை கொடுத்திருக்கின்றார், ஆனால் அதை உணராதவர்களாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவர் நேரிலே வந்து சொல்வதில்லை மாறாக ஏதோவொரு வகையில் தன்னை வெளிப்படுத்திய வண்ணமே இருக்கிறார். இவற்றை எமது ஞானக் கண்ணினால் மாத்திரமே காண முடியும். அன்று சீடர்களை உங்களுடன் பையோ, தடியோ எதுவும் கொணடு செல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தார். ஏனெனில் எங்கு சென்றாலும் தான் எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகிறார். “ வானத்துப் பறவைகளைப் பாருங்கள் அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை” இவ்வாறு பறவைகளை பாதுகாக்கும் இறைவன் அதற்கு மேலாக படைக்கப்பட்ட எங்களை எவ்வாறு பாதுகாப்பார். எனவே நீங்கள் இறைவார்த்தையை அறிவிக்க செல்லும் பொழுது நீங்கள் கூறுவதை ஏற்றுக்கொள்வோர் இல்லத்தில் தங்கியிருங்கள், மாறாக நீங்கள் சொல்வதை கேட்காதோர் இல்லத்திலிருந்து உங்கள் காலிலுள்ள தூசியை தட்டிவிட்டு அங்கிருந்து புறப்படுங்கள்”. இவ்வாறாக இயேசு சீடர்களுக்கு கூறுகிறார். எனவே நாங்கள் இயேசுவைப்பற்றி அறிவிக்கும் பொழுது கூறுவதைக் கேட்காதோர் மட்டில் வாதிட்டாது அன்புடன் பேசி கூற முயலுவோம். இல்லாவிடின் அவர்களுக்கு நன்றி கூறி அங்கிருந்து விடைபெறுவோம். “கேட்கச் செவி உள்ளோர் கேட்கட்டும்”